உ

அருள்மிகு
இராமேசுவரர் திருவருள்



ஆக்கியோன் :

அருட்கவியரசு, புலவர் ;

சோழபுரம், ரெ. அரங்கசாமி எம். ஏ.,

தமிழ்ப் பேராசிரியர்,

தெய்வத்தானக் கல்லூரி,

இராமேசுவரம்.

இராமேசுவரம்,

அருள்மிகு இராமநாதசுவாமி திருத்தசாங்கம்

காப்பு.

இராமநாதர் நாமத் திருத்தசாங்கம் பாடி
இராமநாதர் பேரருள் ஏற்க-வராவரமாய்
வேழ முகத்தன் வினைதீர்த்துக் காப்பவனை
ஆழ நினைந்தேன் அருள்!

1. நாமம்.

தெளிதேன் மொழிக்கிள்ளாய்! தேவைப் பதிவாழ்
அளியுடையார் நாமம் அறைவாய்!-களிமிக்குப்
பாவப் பிணிநீக்கிப் பார்முதற் காக்குமீசன்
தேவரணி ராமநாதர் தேர்!

2. நாடு.

அன்பு மணிக்கிள்ளாய்! ஆன்ற இராமநாதர்
இன்பவள நாட்டை இயம்பிடுவாய்!-மன்பதையில்
மாமன்னர் சேதுபதி மன்னும் முகவையே
ராமநாதர் நாடென நாடு!

3. ஊர்.

அஞ்சிறைக் கிள்ளாய்! அருள்ராம நாதரூர்
செஞ்சொற் றமிழாலே செப்பிடுவாய்!-நஞ்சுடையார்
வேண்டும் வரமளித்து வெவ்வினை தீர்த்தளிப்பார்
பாண்டுமிரா மேச்சுரமூ ராம்!

அருள்மிகு

பர்வத வர்த்தினி பக்திக் கலிவெண்பா

விநாயகர் வணக்கம்

(1) வேத விழுப்பொருளாய் விண்ணோர் தொழுதவை
ஆதவன் ஐங்கரத்தோன் ஆட்சிசெய ! - மாதவ
வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
எந்தன் கலிதீர்ப்பாய் ஏற்று !

பர்வத வர்த்தினி வணக்கம்

(2) தேவை உலாத்திகழும் சீர்சால் திருநகரின்
பாவையாள் பார்புகழும் பத்தினியாள் –நாவையா
பர்வத வர்த்தினியாள் பக்திக் கலிவெண்பா
சர்வமும் காத்தருளும் சார்ந்து !

நூல்

1 சீர்மேவும் தேவி சிரஞ்சிவியாள் ! செல்வமெலா
பார்புகழ்த் தந்தருளும் பாவையாள்! -கார் நிறத்தா
2 வேத விழுப் பொருளாள்! வேண்டிடும் மெய்ப்
[பொருளா
ஆதி பராபரையாள் ! அம்மையவள் ! — நீதிதேவி!
3 தொண்டரெலாம் போற்றவரும் தூயவள் ! தொல்
[பொருளா
எண்டிசையும் ஆட்சிசெயும் ஒன்றெளியாள் ! —
கன்னையாள்
4 சிந்தை குடிகொண்ட செ

214 சித்தம் மகிழ்ந்தே திருக்கோயில் சுற்றிவந்தே
பக்தியுடன் போற்றப் பலனருள்வாய்! — புத்திமிக்கு

215 ஏழை எளியோர்க் கிரங்குவார்க் கென்றும்
வாழையடி வாழைபோல் வாழ்வளிப்பாய்! — ஏழை
[பங்கி!

216 பர்வத வர்த்தினிநின் பாதம் பணிந்தேத்தச்
சர்வமும் காப்பாய் சரண்!



இன்னமுதம்!

1. மெய்யன்பர்க் காக்கநலம் மேதினியில் உண்டாக்கி
உய்யும் வழிகூறும் ஓதுங்கால்! — தெய்வநூல்!
பார்புகழும் சக்தியாள் பர்வத வர்த்தினியாள்
ஆர்வமுடன் ஏற்பார்க் கமுது!

2. வந்தவினை தீர்ப்பதுடன் வாரா வினைகாத்தே
எந்நலமும்தோற்றருளும்இந்நூற்காண்!-மன்னும்நூல்
பர்வத வர்த்தினிப்பேர் பார்கொள் கலிவெண்பா
சர்வமும் காத்தருளும் சார்ந்து!

3. முக்கனியும் தேனும் முறுகியல் பாகுடனே
சக்கரையும் பாலும் சரியளவாய்! — பக்குவமாய்!
இன்னமுதாய் ஏற்க இனிதளிக்[illegible] [illegible]ந்நூற்பா
என்னலமும் தோற்றும் இனி[illegible]

அருள்மிகு இராமேசுவரர் திருவ[illegible]



ஆக்கியோன்: அருட்கவியரசு, புலவர்;
சோழபுரம், சி. அரங்கசாமி, எம். ஏ.

விலை ரூ. 1-00